# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

## இரத்தினபுரியில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் புலம்பெயர் வள நிலையத்திற்காக முன்மொழியப்பட்ட கழிகான் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை மற்றும் அகற்றும் அமைப்பு

## ஒப்பந்த இல. – PR/02/05/33 Vol.II

1. **இரத்தினபுரியில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் புலம்பெயர் வள நிலையத்திற்காக முன்மொழியப்பட்ட கழிகான் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை மற்றும் அகற்றும் அமைப்புக்காக** தகுதி பெற்ற விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவினால் (DPC) முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2. **மீளளிக்கப்படாத கட்டணமாக இருபது ஆயிரம் ரூபாவை (ரூபா 20,000.00) செலுத்தி 2026.01.29 ஆம் திகதி தொடக்கம் 2026.02.17 ஆம் திகதி வரை பெறுகைப் பிரிவில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்லை** இருந்து கிடைக்கும் படிவங்களில் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

3. தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் பின்வரும் தகைமை அளவுகோல்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

   விலைமனுதாரர்களின் தகைமை

   ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்:

   - மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் (CEA) கழிவுநீர் சுத்திகரிக்கு மற்றும் அது தொடர்பான சேவைக்காக ஆலோசகர் பிரிவின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
   - நிறுவனம் ஒன்றாக இலங்கையில் பதிவு செய்திருத்தல் வேண்டும் என்பதோடு (குறைந்தது) 06 ஆண்டுகள் அனுபவத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் மற்றும் தொடர்புடைய சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
   - அனைத்து விலைமனுதாரர்களும் தரம் C5 அல்லது அதற்கு மேற்பட்டதான – நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு செய்திருத்தல் வேண்டும்.
   - ரூபா 5.00 மில்லியனைத் தாண்டும் ஒவ்வொரு விலைமனுவுக்கும் விலைமனுதாரர் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆவது பிரிவுக்கு அமைய பொது ஒப்பந்த பதிவாளர் மூலம் வழங்கப்படும் செல்லுபடியான சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

   ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு தேவையான தகைமையில் உள்ளடங்குவன:

   ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, விலைமனுதாரர்கள் பின்வரும் குறைந்தபட்ச தகைமை அளவுகோலை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;

   - கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளின் சராசரி ஆண்டு பெறுமதி குறைந்தது 100.0 மில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும்.
   - 3 தொடக்கம் 6 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட்ட குறைந்தது 50.0 மில்லியன் ரூபா திட்டப் பெறுமதி ஒன்றுடன் இதனையொத்த பண்பு மற்றும் சிக்கற்பாடுடைய அல்லது கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் விகிதசமமான காலம் ஒன்றுடன் பூர்த்தி செய்யப்பட்ட உயர் திட்டப் பெறுமதி ஒன்றைப் பிரதான ஒப்பந்ததாரராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
   - கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்யப்பட்ட, தனியார் துறை அல்லது அரச நிறுவனத்தின் இதனையொத்த பண்பு மற்றும் சிக்கற்பாடுடைய குறைந்தது 2 அலகுகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
   - முன்மொழியப்பட்ட வடிவமைப்பு குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கடந்த 5 ஆண்டுகளுக்குள், அவர்கள் முன்மொழியப்பட்ட பணிக்கு சமமான பண்பு மற்றும் சிக்கற்பாடுடைய குறைந்தது இரண்டு வேலைகளின் வடிவமைப்புகளை மேற்கொண்டிருத்தல் வேண்டும்.
   - ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எந்த ஒரு முற்கொடுப்பனவையும் தவிர்த்து மற்ற ஒப்பந்தக் கடப்பாடுகளை கழித்த பின் திரவச் சொத்துகள் மற்றும்/ அல்லது கடன் வசதிகளின் குறைந்தபட்சத் தொகை 50 மில்லியன் ரூபாவுக்கு குறையாது இருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் விலைமனுவுடன் சேர்த்து இணைக்கப்பட்ட வடிவமான 2024 பெறுகை கையேட்டுக்கு இணங்கும் வகையில் கூட்டு இல்லை என்ற உறுதிமொழிப் பத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. **முகாமையாளர் (பெறுகை), இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்லை** இடமிருந்து (தொ.: 0112880550 மின்னஞ்சல் mgr_procurement@slbfe.lk) உங்களால் மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு **2026.01.29 ஆம் திகதி தொடக்கம் 2026.02.17 ஆம் திகதி வரை மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை** விலைமனு ஆவணங்களை பெற முடியும்.

5. விலைமனு ஆவணங்களை **முகாமையாளர் (பெறுகை), இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்லை** என்ற முகவரியில் கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம்.

6. விலைமனுக்கள் 2026.05.20 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும் (விலைமனு மூடப்பட்ட திகதியில் இருந்து 91 நாட்கள்)

7. அனைத்து விலைமனுக்களும் **500,000.00 ரூபா** விலைமனு பிணைப் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு **2026.06.17**ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும் (விலைமனு மூடப்பட்ட திகதியில் இருந்து 119 நாட்கள்).

8. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை **பத்தரமுல்லை, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இல. 234, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பெறுகைப் பிரிவில் உள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுதல் வேண்டும்.**

9. நிர்மாணக் காலம் 90 நாட்கள்.

10. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு இரத்தினபுரி, புதிய நகர், வித்தியாலை மாவத்தை 89/6 இல் **2026.02.06 ஆம் திகதி மு.ப. 10.30** இற்கு இடம்பெறும்.

11. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி **2026.02.18 அன்று மு.ப. 11.00** என்பதோடு அது மூடப்பட்ட பின் உடன் திறக்கப்படும்.

12. விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கோரப்படுகின்றனர்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (DPC),**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்லை.**
**தொ. 0112880500**

"அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்பு"